முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 10.02.2026. EP.No.11/2024 in OS.445/2008. ம.சா.1. வெள்ளியங்கிரி,

த/பெ. நஞ்சப்ப கவுண்டர்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1) நான் 1987ல் கிரயம் பெற்றதில் இருந்து இது நாள் வரை மேற்படி வண்டித்தடம் அளக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் கிரயம் பெற்றதில் இருந்தே அந்த வண்டித்தடம் புதர் மண்டித்தான் கிடக்கிறது என்றால் கிழமேல் தடம் தான் உபயோகிக்க முடியாமல் புதர் மண்டி கிடக்கிறது. தென் வடல் வண்டித்தடம் புதர் மண்டிக் கிடக்கிறது என்றால் புதர் இல்லை. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அ.வ.எண். 236/2024 வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அவர் தாவா வண்டித்தடம் புதர் மண்டி இருப்பதால் அளவீடு செய்யமுடியவில்லை என ஒரு குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

2) பொது வண்டித்தடம் யாரும் உபயோகிக்க முடியாமல் இருக்கிறது என்றால் எதிர்மனுதாரர்கள் முழு தடத்தையும் ஓட்டி சோளம் விதைத்து விட்டார்கள். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட போது அவரிடம் முழு இடமும் சோளம் விளைவிக்கப்பட்டதை காண்பித்தேனா என்றால் காண்பித்தேன். மேற்படி விவரத்தை நீதிமன்ற ஆணையர் அவரது குறிப்பாணையில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது தவறு என்றும் மேற்படி தடம் புதர் மண்டிக்கிடக்கிறது என்றும் அதில் சோளம் பயிரிடவில்லை என்றால் சரியல்ல,.

3) ஆனைமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ம சா ஆ 1 புகாரில் பகுதி தடத்தை தான் அழித்ததாக

ஒப்பம்/- (R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

குறிப்பிட்டுள்ளது முழு தடத்தை அழித்ததாக எவ்வித குறிப்பும் இல்லை என்றால் சரிதான். ம சா ஆ 2 ல் எந்த தேதியில் எதிர்மனுதாரர்கள் ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்று கூறவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. அதேபோல் கோவை மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த புகார் ம சா ஆ 4 லும் வண்டித்தடத்தை தடுத்ததாக தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

4) நான் தாக்கல் செய்துள்ள புகைப்படங்கள் மனுதாக்கல் செய்வதற்கு முன்பு எப்போது எடுக்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை. மேற்படி புகைப்படங்களில் முட்புதர்கள் மண்டிக்கிடக்கிறது என்றால் சரிதான். மேற்படி புகைப்படத்தில் ஒத்தையடி பாதை தான் செல்கிறது என்றால் சரிதான். மேற்படி புகைப்படத்தில் உள்ள தென்னை மரங்கள் யாருடையது என்றால் சிவகாமி அம்மா உடையது ஆகும். புகைப்படங்கள் எடுக்கும் போதே புதர் மண்டி தான் இருந்தது என்றால் சரிதான். மேற்படி தடத்தில் தேக்கு மரங்கள், சீனி புளியமரம் தவிர வேறு எதுவும் இல்லை என்றால் சரிதான். சீனி புளியமரம் தடத்தில் சாய்ந்துள்ளது.

5) மேற்படி தடத்தில் வேலி கற்களோ அல்லது எல்லைக்கற்களோ இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம சா ஆ 6 புகைப்படத்திற்கும் மனு சொத்து தடத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி ம சா ஆ 6 புகைப்படங்களில் விவசாய நிலங்கள் தான் உள்ளது என்றால் சரியல்ல. அவை வண்டித்தடம் ஆகும். மேற்படி வண்டித்தடத்திற்கான காலை எண் தெரியுமா என்றால் தெரியாது. என்ன காலை எண் என்று மேற்படி புகைப்படங்களில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

**எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒப்பம்/– (R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.